ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ஸ்ரீஆளவந்தார் திருநட்சத்திரம்

ஆடி – உத்திராடம்



ஸ்ரீஆளவந்தார் - காட்டுமன்னார் கோயில் - அவதாரஸ்தலம்

## ஸ்ரீஆளவந்தார்

### தனியன்

ஸுசௌ மாஸ்யுத்தராஷாடாஜாதம் யாமுநதேஸிகம் /
ஸ்ரீராமமிஸ்ரசரண ஸரோஜாஸ்ரீத மாஸ்ரயே //

யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாஸேஷகல்மஷ: /
வஸ்துதாமுபயாதோSஹம் யாமுநேயம் நாமிதம் //

திருவவதாரஸ்தலம் - வீரநாராயணபுரம் (காட்டு மன்னார் கோயில்)
திருத்தகப்பானார் - ஈஸ்வரமுனிகள்; திருத்தாயார் - ஸ்ரீரங்கநாயகி
திருப்பாட்டனார் - ஸ்ரீமந் நாதமுனிகள்
திருக்குமாரர் - திருவரங்கப்பெருமாள் அரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சொட்டை நம்பி
திருநாமங்கள் - யாமுனாசார்யர், யமுனைத்துறைவர், வாதிமத்தேப ஸிம்ஹேந்த்ரர், ஆளவந்தார், பெரியமுதலியார்
குலம் - சொட்டை
ஆசார்யர் - ஸ்ரீமந் நாதமுனிகள்,
புருஷகாரர் - மணக்கால்நம்பி (குருபரம்பரை வரிசைக்கு இவர் ஆசார்யர்)
சிஷ்யர்கள் - பெரியநம்பி, பெரிய திருலைநம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி, திருமாலையாண்டான், தெய்வவாரியாண்டான், வானமாமலையாண்டான், ஈஸ்வராண்டான், ஜீயராண்டான், ஆளவந்தாராழ்வான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார், தேவப்பெருமாள், மாறனேரி நம்பி, திருகச்சி நம்பி, திருவரங்கப்பெருமாள் அரையர், திருக்குருகூர் தாஸர், வகுளாபரண ஸோமயாஜியார், அம்மங்கி, ஆள்கொண்டி, வடமதுரையில் பிறந்த கோவிந்ததாஸர், ராஜபுரோஹிதரான நாதமுனிதாஸர், ரங்க சோழானின் ராஜபத்னியான திருவரங்கத்தம்மன் ஆக இருபத்திருவர் சிஷ்யர்கள் இவருக்கு.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் எட்டு –

1. ஆத்மஸித்தி
2. ஸம்வித்ஸித்தி
3. ஈஸ்வரஸித்தி என்னும் ஸித்தித்ரயம் - வேதாந்த தத்வ விசாரபரமான இவை எம்பெருமானாருக்கு ஸ்ரீபாஷ்யம் முதலானவற்றை அருளிச்செய்வதற்குக் கை கொடுத்தன.
4. ஸ்ரீகீதார்த்த ஸங்கரஹம் - இது எம்பெருமானாருடைய கீதாபாஷ்யத்திற்கு அடிப்படையாய் அமைந்தது.
5. ஆகம ப்ராமண்யம் - இது பாஞ்சராத்ர ஆகமத்தின் ப்ராமண்யத்தை ஸமர்த்திப்பதாய், பாஞ்சராத்ராதிகரணம் முதலானவற்றை விவரிக்கும் போது ஸ்ரீபாஷ்யகாரர்க்கு உதவிற்று.
6. மஹாபுருஷநிர்ணயம் - ஸ்ரீமந் நாராயணனின் பரத்வத்தை ஸ்தாபிக்கும் க்ரந்தமான இது, வேதார்த்த ஸங்க்ரஹம் முதலான பல க்ரந்தங்களை அருளிச்செய்யும் போது எம்பெருமானாருக்குப் பயன்பட்டது.
7. ஸ்தோத்ர ரத்னம் - எம்பெருமானைப்பற்றிய தன்னிகரில்லாத துதிநூல் இது.
8. சது:ஸ்லோகீ – மிகச் சுருக்கமாய், மிக ஆழ்ந்த பொருளை உடைய இத்துதிநூல் பிராட்டியைப் பற்றியது.

இவ்விரண்டு (7, 8) துதிநூல்களும் உடையவராலே கத்யம் முதலானவற்றில் ஆர்வத்தோடு கையாளப்பட்டவை. இவற்றில் ஸித்தித்ரயத்தில் ஒருபகுதியும், மஹாபுருஷநிர்ணயம் முழுவதும் இப்போது நமக்கு கிடைக்கவில்லை. மற்றவை உள.

ஸ்தோத்ர ரத்னத்திற்கும் சது:ஸ்லோகிக்கும் பெரியவாச்சான் பிள்ளை மணிப்ரவாள வ்யாக்யானமும், ஸ்ரீதேசிகர் ஸம்ஸ்க்ருத வ்யாக்யானமும் அருளியுள்ளார். சது:ஸ்லோகிக்கு நாயனாராச்சான்பிள்ளை விஸ்தாரமான மணிப்ரவாள வ்யாக்யானம் அருளிச்செய்துள்ளார். ஸ்ரீகீதார்த்த ஸங்கரஹத்துக்கு ஸ்ரீதேசிகர் வடமொழியுரை அருளியுள்ளார்.

<u>நம்மாழ்வார் விஷயமாக ஆளவந்தார் அருளிச் செய்துள்ள தனியன்</u>

மாதா பிதா யுவதயஸ் தநயநா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் /
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா //

<u>ஸ்ரீ ஆளவந்தார் அருளியுள்ள ஸ்தோத்ரரத்தனத்திலிருந்து</u>
<u>ஒரு ஸ்லோகத்தை இங்கே அனுபவிப்போம் - முதல் ஸ்லோகம்</u>

நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:
நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:

நமோऽசிந்த்யாத் புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்யராஸயே /
நாதாய முநயேऽகாத பகவத் பக்திஸிந்தவே //

<u>இவரை போற்றியுரைக்கும் பாசுரம் - இராமாநுஜநூற்றந்தாதி - 21ஆம் பாசுரம்</u>

நிதியைப் பொழியும் முகிலென்று. நீசர்தம் வாசல்பற்றித்
துதிகற்றுலகில் துவள்கின்றி லேன் இனித். தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத் துறைவன் இணையடியாம்
கதிபெற்றுடைய. இராமானுசனென்னைக் காத்தனனே.

<u>ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீஆளவந்தாரை பற்றி அருளியுள்ள ஒரு ஸ்லோகம்</u>
<u>ஸ்ரீரங்கராஸ்தவம் - 4ஆம் ஸ்லோகம்</u>

விதாய வைதிகம் மார்க்கம் அகௌதஸ்குதகண்டகம் /
நேதாரம் பகவத் பக்தேர் யாமுநம் மநவாமஹை //

(ஏன் ஏன் என்று கேட்டு விதண்டாவாதம் செய்யும் வாதியராம் முட்கள் இல்லாததாக வைதிக நெறியைச் செய்து அதில் அழைத்துச் செல் பவராய் பகவானிடம் பக்தியைத் தழைத்தோங்கச் செய்பவரான ஆளவந்தாரை தியானிப் போமாக).

ஸ்ரீவேதாந்ததேஸிகர் அருளியுள்ள யதிராஜ ஸப்ததி – 8

விகாஹே யாமுநம் தீர்த்தம் ஸாது ப்ருந்தா வநேஸ்திதம் |
நிரஸ்தஜிஹ்மகஸ்பர்ஸே யத்ர க்ருஷ்ண: க்ருதாதர: ||

(1. நீக்கப்பட்ட காளியனின் தொடர்பையுடையதான எந்த யமுனா நதியில் கண்ணபிரான் அன்பு செய்தாரோ அந்த நல்ல ப்ருந்தாவனத்தில் இருக்கும் யமுனா நதி தீர்தத்தில் மூழ்குகிறேன். 2. கோணல் வழியில் செல்லும் குத்ருஷ்டிகளின் தொடர்பை க்ரந்தங்களாலே நிரஸித்தவரான எந்த யாமுனாசார்யரான ஆளவந்தாரிடம் கண்ணபிரான் (அல்லது பெரியவாச்சான் பிள்ளை) ஆகிற க்ருஷ்ணன் மிகவும் அன்புடையவரோ, பரிசுத்திகரரானவரும், ஸாதுக்களின் ஸமூகத்தை ரசஷிப்பதில் உறுதியுள்ள வருமான அந்த ஆளவந்தாரின் குணாநுபவ வெள்ளத்தில் மூழ்கிறேன்).

ஸ்ரீபராங்குஸ பஞ்சவிம்ஸதி - கோயில் அண்ணன் அருளியது - 3ஆம் ஸ்லோகம்

ஸ்ரீரங்கராஜ பதபங்கஜ ஸங்கஸூலம்
ஸ்ரேய: பரம்முதுரபூர்வகவேர பூர்வம்
நாதார்ய யாமுந யதீஸ்வர பாகதேயம்
நாதம் குலஸ்ய மமநௌமி பராங்குஸார்யம்

வாழித்திருநாமம்

மச்சணியும் மதிளரங்கம் வாழ்வித்தான் வாழியே
மறைநான்கு மோருருவில் மகிழ்ந்துகற்றான் வாழியே
பச்சையிட்ட ராமர்பதம் பகருமவன் வாழியே
பாடியத்தோனீடேறப் பார்வைசெய்தோன் வாழியே
கச்சிநகர் மாயனிருகழல் பணிந்தோன் வாழியே
கடக வுத்திராடத்துக் காலுதித்தான் வாழியே
அச்சமற மனமகிழ்ச்சி யணைந்திட்டான் வாழியே
ஆளவந்தார் தாளிணைக ளனவரதம் வாழியே.

ஆளவந்தார் என்று திருநாமம் வரக்காரணம்

யமுனைத் துறைவர் மஹா பாஷ்ய பட்டர் என்பவரிடம் சாஸ்த்ரம் கற்று வந்தார். அக்காலத்தில் ராஜபுரோஹிதனாய் இருந்த ஆக்கியாழ்வான் என்பவன் தன் வித்யா கர்வத்தாலே அந்நாட்டிலே உள்ள எல்லா வித்வான்களிடமும் கப்பம் வாங்கிவந்தான். அவன் ஒரு நாள் கப்பம் கேட்டு மஹாபாஷ்ய பட்டருக்கு ஓலை அனுப்பினான். பட்டர் கப்பம் செலுத்த வழியில்லாமல் திகைத்து நிற்பதைப் பார்த்த யமுனைத் துறைவர் அவ்வோலையைக் கிழித்தெறிந்து விட்டார். அதைக்கேட்ட ஆக்கியாழ்வான் ஓலையைக் கிழித்தவன் வெறும் கவியோ அல்லது தந்த்ரம் கரைகண்டவனோ? என்று கேட்டு அனுப்பினான். அதற்கு யமுனைத் துறைவர் யாம் கவிகள் மாத்திரம் அல்லாமல் யாம் மீமாம்ஸா சாஸ்த்ரக்கடலை மாத்திரம் கரைகண்டவர்கள் அல்லோம் எதிர்வாதம் புரியுமவர்களாகிற யானைகளின் மிக்க ஆடம்பரமாகிற மத்தகத்தைப் பிளக்க வல்லமையுடையோமும் ஆவோம் என்று பதில்

எழுதி அனுப்பினார் இவர். இதைக்கண்டு வியப்புற்ற அரசன் யமுனைத் துறைவரை உடனே ராஜஸபைக்கு வரச்சொல்லி ஓலை அனுப்பினான். அவ்வோலையையும் யமுனைத் துறைவர் கிழித்துவிட, அதைக்கேட்ட அரசன் இவர் சாமன்யரல்லர் என்று அறிந்து இவர் வருவதற்குப் பல்லக்கை அனுப்பினான்.

யாமுநேயரும் அப்பல்லக்கில் ராஜசபைக்கு எழுந்தருளி மலையரசன் மகளான பார்வதியின் தளிரடிவைப்பினாலே சிறந்து விளங்கும் தாழ்வரைகளையுடைய இமயமலை முதல் அரக்கனால் அபஹரிக்கப்பட்ட சீதா பிராட்டியின் திருமுகத்தாமரை மலர்வதற்குக் காரணமான ஸேது வரையிலும் சந்திர சூர்யர்கள் இருவரையும் தலையலங்காரமாக உடைய உதயகிரிக்கும் அஸ்தமநகிரிக்கும் நடுவிலும் பூர்வமீமாம்ஸை உத்தரமீமாம்ஸை எனும் இரண்டு சாஸ்திரத்திலும் விசேஷமான பயிற்சியினாலே மயர்வற்ற நெஞ்சையுடைய என்னைப்போன்ற மற்றொருவன் தேடப்படட்டும் (தேடினாலும் கிடைக்கமாட்டான்) என்னும் பொருள் உள்ள ஸ்லோகத்தை எழுதியனுப்பினார். அதற்குப்பின் ஆக்கியாழ்வானுக்கும் யமுனைத்துறைவர்க்கும் மத்யஸ்தர்களான வித்வான்கள் முன்னிலையில் தர்க்கம் நடந்தது.

அப்போது அங்கு ஸிம்ஹாஸத்திலிருந்த ராஜமஹிஷியும் ராஜாவும் ஒருவர்க்கொருவர் பின்வருமாறு சபதம் செய்து கொண்டனர்.

யாமுநேயர் தோற்றாராகில் நான் மஹிஷீபதவியைத் துறந்து உமக்கு வேலைக்காரியாவேன் என்றாள் ராஜமஹிஷி.

ஆக்கியாழ்வான் தோற்றானாகில் யமுனைத்துறைவர்க்கு நான் பாதி ராஜ்யம் தருவேன் என்றான் அரசன்.

இளம் பிள்ளையான இவரை சாஸ்த்ரவிவாதமில்லாமலே லௌகிக விஷயங்களிலே தோற்கடித்துவிடலாம் என்று எண்ணிய ஆக்கியாழ்வான், லௌகிகங்களிலே நீர் இல்லை என்பதை நான் உண்டு என்பேன். நீர் உண்டு என்பதை நான் இல்லை என்பேன். வென்றவன் தோற்றவன் தலையிலே அடிக்கவேண்டியது என்று கூறினான்.

அதற்கு இசைந்த யமுனைத்துறைவர் (1) உன் தாய் மலடியல்ல (2) அரசன் தார்மிகன் (3) ராஜபத்நீ பதிவ்ரதை என்று மூன்று வாக்கியங்களைச் சொல்லி அவனை மறுக்கச் சொன்னார். அவன் அவற்றை மறுக்க இயலாமல் மௌனியாய் இருந்தான். பின்பு சாஸ்த்ரவிசாரமும் நடந்தது. அதிலும் தோல்வியுற்றான் ஆக்கியாழ்வான்.

நீர் சொன்ன மூன்று லௌகிக வாக்யங்களையும் உம்மால் மறுக்க முடியுமோ? என்று யமுனைத்துறைவரை ராஜாவும் ராஜமஹிஷியும் கேட்டனர். முடியும் என்று சொல்லி யாமுநேயர் பின் வருமாறு மறுத்துக் காட்டினார்.

1)ஒரு மரமும் தோப்பல்ல. ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல என்கிற உலக வழக்கின்படி நிலையற்றதான இவ்வுலகில் ஒரு பிள்ளையைப் பெற்ற ஒரு தாய் இப்பிள்ளை நமக்குத் தக்கவேணுமே நம்மை ரசஷிக்க வேணுமே என்று கலங்கிக்கொண்டேயிருப்பாள் ஆகையால் அவள் பிள்ளை பெற்றும் மலடியேயாவாள்.

இம்முறையில் ஒரு பிள்ளை பெற்ற ஆக்கியாழ்வானுடைய தாயார் மலடியே யாகையால் முதல் வாக்கியம் மறுக்கப்பட்டது.

2) குடிகள் செய்யும் பாபம் அரசனைச் சேருமாகையாலே பரம தார்மிகனான இவ்வரசனும் குடிகள் செய்யும் பாபத்திலே பங்கு பெறுகிறான் ஆகையாலே இரண்டாவது வாக்யமும் மறுக்கப்பட்டது.

3) ஸோமः ப்ரதமோவிவிதே கந்தர்வோ விவித உத்தரः த்ருதீயொ அக்நிஷ்டே பதீः துரீயாஸ்தே தனுஷ்யஜாः (ஸோமன் முதல்நாள் உன்னை மணம் புணருகிறான். கந்தர்வன் அடுத்த நாள் உன்னை மணம் புனருகிறான். மூன்றாவது நாள் அக்நியானவள் உனக்குப் பதியாகிறாள். நாலாவது நாளிலேயே கைப்பிடித்த மனிதன் உனக்குக் கணவனாகிறான்) என்கிற வேத வாக்யத்தின்படி வைதிக முறையில் மணம் செய்துகொண்ட எல்லா ஸ்திரீகளுக்குமே மணமான முதல் மூன்று நாட்களில் தேவதையோடு தொடர்பு உண்டு. ஆகையால் பதிவ்ரயத்தில் குறையுண்டு. அக்குறை பரமவைதிகமான முறையில் அரசனைக் கைப்பிடித்த ராஜபத்னிக்கும் உண்டு. ஆகையாலே மூன்றாவது வாக்யமும் மறுக்கப்பட்டது.

இவ்வண்ணம் லௌகிக வாதத்திலும் சாஸ்த்ர வாதத்திலும் ஆக்கியாழ்வானை வெற்றிகொண்ட பின்பும், ராஜபுரோஹிதனுமாய், பிராயத்தில் (வயதில்) முதிர்ந்தவனுமான ஆக்கியாழ்வானை முதலில் பண்ணின ப்ரதிஜ்ஞைப்படி தலையிலே அடிப்பதற்கு மறுத்துவிட்டர் யமுனைத்துறைவர்.

இவருடைய பண்பையும் சாஸ்த்ரப் புலமையையும் லோக அனுபவத்தையும் கண்டு வியப்புற்ற வித்வான்கள் அனைவரும் இவருக்கு ப்ரஹ்மரதம் பண்ணிப் பெருமைப்படுத்தினர். ராஜ மஹிஷியும் என்னை ஆளவந்தீரோ என்று யமுனைத்துறைவரைத் தன் பிள்ளையைப்போலே எடுத்து அணைத்துக்கொண்டு தன் பர்த்தாவுடன் அரண்மனைக்குள் புகுந்தாள். அரசனும் தன் ப்ரதிஜ்ஞைப்படி இவருக்குப் பாதி ராஜ்யம் கொடுத்தான். அன்று முதல் இவரை ஆளவந்தார் என்று எல்லோரும் அழைத்தனர். இவரும் தம் பத்தினியோடுகூடி அரசாட்சி செலுத்திக்கொண்டு அரச போகத்தில் ஆழ்ந்திருந்தார்.

<u>மணக்கால் நம்பி ஆளவந்தாரைத் திருத்திப் பணிகொண்டவிதம்</u>

ஆக்கியாழ்வானை வாதத்தில வென்ற ஆளவந்தார் அரசன் வெகுமதியாக கொடுத்த பாதி ராஜ்யத்தை ஆண்டு வந்தார்.

உய்யக்கொண்டார் நியமனத்தாலே யமுனைத் துறைவரை தர்சன ப்ரவர்த்தகராக்க ஆசைகொண்ட மணக்கால் நம்பி கட்டும் காவலுமாய் இருந்த அரண்மனைக்குள் சென்று ஆளவந்தாரைக் காணமுடியவில்லை. திருமடைப்பள்ளியில் பணிபுரிவோர் இடமிருந்து தூதுளைக் கீரையே ஆளவந்தார் விரும்பி அமுது செய்யும் கறியமுது என்று அறிந்து மடைப்பள்ளிக்கு ஆறுமாத காலம் தூதுளைக் கீரையை அளித்துவந்தார். அப்போதும் இவரைப்பற்றி ஆளவந்தார் விசாரிக்காமையாலே வருந்த, நாலுநாள் தூதுளையைக் கொடுப்பதைத் தவிர்த்திருந்தார். ஆளவந்தார் அமுதுசெய்யும்போது நாலு நாளாகத் தூதுளை இல்லாமல் இருப்பதேன்? என்று கேட்டருள அவர்களும் ஆறு மாதாமாக வயது முதிர்ந்த ஒருவர் அளித்துவந்தார்.

நாலு நாளாக அளிக்கவில்லை என்று கூறினார்கள். ஆளவந்தாரும் கேட்டு வியப்புற்று அடுத்தபடி அவர் வந்தால் நமக்குத் தெரிவியுங்கள் என்று நியமித்துவிட்டார்.

மறுநாள் மணக்கால் நம்பியும் இன்னமும் முயற்சி செய்து பார்ப்போம் என்று தூதுளை எடுத்துவந்து திருமடப்பள்ளியில் கொடுத்தார். அவர்களும் நம்பியை ஆளவந்தாரிடம் அழைத்துச் சென்றனர். ஆளவந்தாரும் அவரைக்கண்டு வணங்கி ஆஸனமிட்டு நீர் இத்தனை நாளும் தூதுளை கொண்டு வந்து இடுகிறது எதற்காக? உமக்கு வேண்டிய தநதாந்யங்களை அளிக்கிறோம் என்று நம்பியைக் கேட்க நம்பியும் நமக்கு இவை யொன்றும் வேண்டா. உமது பாட்டனார் தேடிவைத்த நிதி ஒன்று என்னிடம் இருக்கிறது. அதை உம்மிடம் அளிப்பதற்கு நான் இங்கு வந்து போவதைத் தடைசெய்யாமல் இருக்கும்படி உத்திரவிடவேணும் என்று அருளிச்செய்ய ஆளவந்தார் அதன்படியே அரண்மனைச் சேவகர்களிடம் கட்டளையிட்டார். அன்று முதல் தினந்தோறும் நம்பி அரண்மனைக்கு எழுந்தருளி கீதையின் செம்மைப் பொருள் தெரியும்படி 18 அத்தியாயமும் அருளிச் செய்ய ஒரு நாளைக் கொரு நாள் ஆர்த்தி மிஞ்சப் பெற்ற ஆளவந்தார் இவ்வெம்பெருமானை அடையும் உபாயம் எது? என்று நம்பியைக் கேட்க நம்பியியும் தனியே அவரை அழைத்துச் சென்று மெய்மைப் பெருவார்த்தையான சரமஸ்லோகத்தின் பொருளை அவருக்கு அருளிச்செய்து அவனை அடைவதற்கு அவனே உபாயம் என்னும் உறுதியை அவருக்கு உண்டாக்கினார். அருளிச்செயல்களையும் அவற்றின் அரும்பொருள்களையும் அவருக்கு உபதேசித்தருளினார்.

அதற்கும் பின் திருவரங்கம் திருப்பதிக்கு அவரை அழைத்துச் சென்று பெரிய பெருமாளைத் திருவடி தொழச் செய்து உங்களுடை பாட்டனார் தேடிவைத்த பெரு நிதி இதுவே காணும் என்று காட்டிகொடுத்தார். பெரிய பெருமாளிடம் ஈடுபட்ட ஆளவந்தார் ராஜ்யம் முதலான எல்லாவற்றையும் துறந்து சன்யாச ஆஸ்ரமத்தை ஏற்றுக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் தர்ஸன நிர்வாஹம் செய்து வந்தார். அந்திமதசயில் மணக்கால் நம்பி ஆளவந்தாரிடம் தேவரீருடைய பாட்டனாரான நாதமுனிகள் அஷ்டாங்கயோக ரஹஸ்யத்தைக் குருகைக்காவலப்பனிடம் சேமித்து வைத்துள்ளார். அவரிடம் அந்நிதியைப் பெற்றுக்கொள்ளும் என்று நியமித்தருளி உய்யக்கொண்டார் கொடுத்த பவிஷ்யதாசாரிய விக்ரஹத்தை அவரிடம் ஒப்படைத்தார்.

<u>ஆளவந்தார் அஷ்டாங்கயோக ரஹஸ்யத்தை குருகைக்காவலப்பனிடமிருந்து பெறாமல் போனது எங்ஙனம்</u>

மணக்கால் நம்பியின் நியமனப்படி ஆளவந்தார் குருகைக்காவலப்பன் யோகம் செய்யும் இடத்திற்கு சென்றார். ஆளவந்தாரும் அவருடைய யோகத்தைக் கலைக்கக்கூடாது என்னும் திருவுள்ளத்தால் ஓசைப்படுத்தாமல் சுவருக்குப் பின்புறம் போய் நிற்க அப்பனும் பின்புறம் திரும்பிப் பார்த்து இங்கு சொட்டைக் குலத்தார் எவரேனும் வந்ததுண்டோ? என்று கேட்டருள ஆளவந்தாரும் அடியேன் யமுனைத்துறைவன் வந்து இருக்கிறேன் என்று வணங்கி நின்று அடியேன் வந்தது தேவரீர்க்கு எப்படி தெரிந்தது? என்று கேட்க பிராட்டியோடு போகரஸத்தை அனுபவிப்பதைக்காட்டிலும் என்னோடு கலந்திருப்பதை விரும்பும் எம்பெருமான் என்னையும் உபேக்ஷித்துப் பின்புறம் திருப்பிப் பார்த்தனால் நாதமுனி வம்ஸத்தார் ஒருவர் வந்திருக்கவேணும் என்று உணர்ந்தேன் என்று அருளிச்செய்தார்.

ஆளவந்தாரும் யோக ரஹஸ்யத்தை அருளிச்செய்யவேணும் என்று பிரார்த்தித்தார். அப்பனும் தாம் பரமபதம் செல்லவிருக்கும் நாளைக்குறிப்பிட்டு அதற்கு முன் வந்தால் உபதேசிக்கிறோம் என்று திருமுகம் எழுதிக்கொடுத்து ஆளவந்தாரை ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பினார்.

## ஆளவந்தார் திருவனந்தபுரம் எழுந்தருளுதல்

ஸ்ரீரங்கம் கோயிலில் தர்சனம் நிர்வஹித்து வரும்போது நம்பெருமாள் திருவத்யயனோத்ஸவத்திலே அரையர் சேவையில் கெடுமிடர் ஆயவெல்லாம் கேசவ என்ன (திருவாய்மொழி 10ஆம் பத்து 2ஆம் திருவாய்மொழி பதிகம்) என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை அபிநயித்துப் பாடிவருகிறபோது திருவரங்கப் பெருமாளரையர் ஆளவந்தார் திருமுக மண்டலத்தைப் பார்த்து நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கு அறியச்சொன்னோம் (திருவாய்மொழி 10ஆம் பத்து 2ஆம் திருவாய்மொழி 8ஆம் பாசுரம்) என்று வரியை பலகாலும் பாடி அருள, ஆளவந்தாரும் பெரிய பெருமாளுடைய நியமனம் பெற்றுத் திருவந்தபுரத்திற்கு எழுந்தருளினார்.

அங்கு அநந்தபத்மநாபனைத் திருவடிதொழுதார். அப்பொழுது குருகைக்காவலப்பன் எழுதிக்கொடுத்த திருமுகம் நினைவுக்கு வருகையாலே அதை எடுக்கச் செய்து பார்க்கையில் அப்பன் பரமபதம் செல்லும் தினம் அன்றேயாயிருக்கக்கண்டு ஒரு புஷ்பக விமானம் பெற்றிலோமே என்று மிக வருந்தி ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளினார். இதனால் ஆளவந்தாரால் குருகைக்கவலப்பனிடமிருந்து யோக ரஹஸ்யத்தைப் பெறமுடியவில் போய்விட்டது.

## ஆளவந்தாரின் அவதார விசேஷஷமும் அவர் அருளியுள்ள க்ரந்தங்களின் பெருமைகளும்

நம்முடைய தரிசனத்தில் ஆளவந்தரைப் போன்ற வித்வத் ஸார்வபௌமர் இதற்குமுன்பு தோன்றினது மில்லை இனித் தோன்றப் போகிறதுமில்லை என்று திண்ணமாகச் சொல்லலாம். `ந வயம் கவயஸ்து கேவலம் ந வயம் கேவலதந்த்ர பாராகா:' என்று இவர் தாமே அருளிச்செய்தபடி, கவித்திறத்தில் வந்தாலும், நாநா சாஸ்த்ர வைதுஷ்யத்தில் ஒத்தாரும் மிக்காருமின்றிக்கே அத்விதீயரான வ்யக்தி இவரொருவரே. ஸ்வாமி எம்பெருமானார் இவ்வாசாரியரை நேரில் ஸேவித்து இவர் திருவடிகளிலே பரிசர்யைகளைப் பண்ணி அர்த்த விசேஷங்களை க்ரஹிக்க ப்ராப் தியற்றவரானாலும், `ஆம் முதல்னிவன்' என்று இவர் விசேஷ கடாக்ஷம் செய்தருளினதே ஹேதுவாக, அவர் விளக்கில் கொளுத்தின தீவட்டிபோலே மஹாதேஜஸ்வியாக விளங்கி உலகுக்கு ஒருயிராகி நின்றார். இவ்விஷயத்தை ஸ்வாமி தாமே தம்முடைய திருவாக்கினால் ஒருவாறு காட்டியருளினார். கிதாபாஷ்யத்தின் உபக்ரமத்தில் `யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாசேஷகல்மஷ: வஸ்துதாமுபயா தோஹம் யாமுநேயம் நமாமி தம்' என்றருளிச்செய்த ஸ்லோகம் இங்கு அநுஸந்திக்கவுரியது. இதில் ஆளவந்தார் தம்மைக் கடாசஷத்தருளினது தானே ஹேதுவாகத் தாம் சீர்மை பெற்றதாக அருளிச் செய்யாமல், தாம் அவருடைய திருவடித் தாமரைகளையே சிந்தித்து அதனால் சீர்மை பெற்றதாகச் சொல்லியிருக்கிறார். இதனுடைய உட்கருத்து யாதெனில், ஆளவந்தார் என்னைக்

கடாக்ஷித்தருளின தன் பயனாகவே நான் அவரது திருவடிமலரைச் சிந்திக்கும் பாக்கியம் பெற்றேன் என்பதாம். `குருபாதாம்புஜம் த்யாயேத்' என்கிற சாஸ்த்ரவிதியைப் பின் பற்றியருளிச் செய்தவாறு.

ஸ்வாமி எம்பெருமானார் ஆளவந்தாரிடத்தில் நேரில் அர்த்த விசேஷங்கள் கேட்கப்பெறாத குறைதீர அவருடைய திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர்களெல்லாரையும் தாம் ஆச்ரயித்து ஒவ்வொருவரிடத்திலும் அர்த்த விசேஷங்களை யதிகரித்தது `பஞ்சாசார்யபதாச்ரித:' என்னும் விருதுபெற்றார். ஆளவந்தாரோடு நான் கூடியிருந்தேனாயின் பரமபதத்திற்குப் படிகட்டியிருப்பேன், என்று ஸ்வாமி எம்பெருமானார் ஸாதித்ததாக ப்ரஸித்தமான வார்த்தையே இவருடைய ஒப்புயர்வற்ற பெருமையை விளக்காநின்றது. நித்ய விபூதியும் லீலா விபூதியும் சேர்ந்து ஒரு விபூதியாகவே ஆய்விட்டால் உபயவிபூதிநாதன் என்று தான் வஹிக்கும் விருதுக்குக்குறை விளைந்திடுமேயென்கிற எண்ணத்தினாலேயே எம்பெருமான் இவ்வாசாரியரை கூட்டி வைக்கவில்லைபோலும்.

உபய வேதாந்த ரஹஸ்ய ப்ரஸ்தாநங்களில் இப்போது நாம் அநுபவித்து வரும் அர்த்த விசேஷங்களுக்கெல்லாம் ஆகாரம் ஆளவந்தாரே என்பதில் சந்தேகமில்லை. இவரருளிச் செய்த ஸித்தித்ரயம் முதலான உத்துங்க சாஸ்த்ர க்ரந்தங்கள் இருக்கட்டும், ஆளவந்தார் ஸ்தோத்ரம் என்று வழங்குகின்ற ஸ்தோத்ர க்ரந்தமானது மஹாவித்வான்களுக்கும் பக்தர்களுக்கும் `எனக்குத் தேனே பாலே கண்ணலே யமுதே' என்று உள்குழைந்து பேசும் படியாக அமைந்து, உட்புகுந்து நோக்க நோக்க உபயவேதாந்த ரஹஸ்யார்த்தங்கள் அனைத்தையும் அழகாகவும் எளிதாகவும் தெளியலாம்படி மஹோபகாரம் செய்திருக்கிற மாண்பு வாசாம் அகோசரம். இதற்கு ஸ்தோத்ர ரத்நம் என்று திருநாமம் சாத்தியுள்ளார்கள்.

ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார்கள் மூன்றுரத்னங்கள் என வழங்குகிறர்கள். (1) ஸ்ரீவிஷ்ணுபுராணத்தைப் புராண ரத்நமென்பர்கள் (இது ஆளவந்தார் ஸ்தோரத்தில் நான்காவது சுலோகத்தில் காணத்தக்கது). (2) த்வயம் என்கிற மந்த்ரத்தை மந்த்ர ரத்நமென்பர்கள் (இது ஸ்ரீவரவரமுநி திநசர்யையில் `மந்த்ர ரத்நாநு ஸந்தாந ஸந்தத ஸபுரிதாதரம்' என்பதில் காணத்தக்கது). (3) இனி மூன்றாவது ரத்னம் ஸ்தோத்ரரத்ந மென்று வழங்கப்படுகிற இவருடைய ஸ்தோத்ரமே யாகும். இதன் எளிமையும் இனிமையும் வாசாமகோசரம். ஆழ்வான் பட்டர் முதலான ஆசார்யர்கள் பணித்த ஸ்தவங்களுக்கு இந்த ஸ்தோரரத்நமே வழிகாட்டியாயிருந்தாலும் இதனுடைய போக்யதை மற்ற எதற்கும் அமையவில்லை.

ஆளவந்தாருடைய நியமத்தினால் எம்பெருமானாரை யீடுபடுத்திக்கொள்வதற்காகக் காஞ்சீபுரத்திற்கு கெழுந்தருளின பெரிய நம்பி சாலக்கிணற்றில் நின்றும் திருமஞ்சன தீர்த்த மெழுந்தருளப் பண்ணிக்கொண்டு போராநின்ற எம்பெருமானாரைச் சார்ந்து பின்புறத்திலே இந்த ஸ்தோத்ரரத்நத்தில் ஒரு ச்லோகத்தைச் செவிக்கினிதாக அநுஸந்தித்து வருகையில் எம்பெருமானார் திரும்பிப்பார்த்து இது யாருடைய திவ்யஸூக்தி? என்று நம்பியை நோக்கிக் கேட்டார். அவரும் இது ஆளவந்தாருடைய திவ்யஸூக்தி என்று உரைக்க, ஆகில் அவரை அடியேன் ஸேவிக்கவேணுமே என்று எம்பெருமானார் கூற, ஆகலாம் நம்மோடே வந்து ஸேவிக்காலாம் என்று நம்பிகள் பணித்தார்.

அப்போதே திருக்கச்சிநம்பியிடம் விடைபெற்றுக்கொண்டு பெரிய நம்பிகளுடன் கோயிலுக்குப் புறப்பட்டருளினதாகக் காண்கிறது. இப்படி எம்பெருமானார் திருவுள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஸ்ரீஸூக்தியின் பெருமையை நாமோ பகர்வது.

(காஞ்சீ ஸ்ரீ உவே PBA ஸ்வாமி அருளியுள்ள திருவத்யயனோத்ஸவ வைப தீபிகையிலிருந்து மேலே கூறிய வைபவம் எடுக்கப்பட்டது)

பின் அழகிய பெருமாள் ஜீயர் அருளியுள்ள வார்த்தாமாலை 394 விவரணம்

ஆளவந்தார் ஒரு நாள் பெருமாளைத் திருவடிதொழக் கோயிலுக்குள் போகா நிற்க, ப்ரயோஜ நாந்தரபரையான ஒருத்தி கண்ணும் கண்ணீருமாகச் சேலையால் கழுத்தைப் போர்த்துக் கொண்டு ப்ரதசஷிணம் பண்ணுவதைக் கண்டார். உடனே கோயிலுக்குள் போகாமல் வெளியிலேயே நின்று `ப்ரயோஜனாந்தரபரை போய்விட்டாளா' என்று விசாரித்து அவள் சென்ற பின்பே உள்ளே சென்றார். சிஷ்யர்கள் அதற்குக் காரணம் கேட்க, `அவள் இருக்கும்போது நாம் திருவடி தொழச்சென்றால் இரண்டு விரோதங்கள் ஏற்படும். அவள் ப்ரயோஜனாந்தரபரை; நாம் அநந்யப்ரயோஜனர்கள். இது அதிகாரி விரோதமாகிற முதல் முரண்பாடு. அவளுக்கு ஐய்வர்யம் முதலான மற்றவை பலம்; நமக்கு எம்பெருமானே பலம். இது பல விரோதமாகிற இரண்டாவது முரண்பாடு' என்று அருளிச்செய்தார். மற்ற பயன்களை விரும்புமவர்களுடன் சேர்ந்தால் அநந்யப்ரயோஜனர்களுக்கும் அவர்களுடைய தோஷம் தட்டும் என்று கருத்து.

ஸ்ரீஆளவந்தாரைப் பற்றிய மங்கள ஸ்லோகங்கள்

எம்பெருமானார் அருளியுள்ள கீதாபாஷ்ய மங்கள ஸ்லோகம்

யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாஸேஷகல்மஷ: /
வஸ்துதாமுபயாதோSஹம் யாமுநேயம் நாமிதம் //

(எவருடைய திருவடித்தாமரைகளை தியானிப்பதால் எல்லா தோஷமும் நீங்கப்பெற்று யான் ஒரு பொருளாக ஆனேனோ அத்தைகய யமுனைத்துறைவரை வணங்குகிறேன்).

எம்பெருமானார் அருளியுள்ள வேதார்த்த ஸங்கரஹம் இராண்டாவது மங்கள ஸ்லோகம்

பரம் ப்ரஹமை வாஜ்ஞும் ப்ரமபரிகதம் ஸம்ஸரதி தத்
பரோபாத்யாலீடம் விவஸமஸுப ஸ்யாஸ்பதமதி /
ஸ்ருதிந் யாயாபேதம் ஜகதிவிததம் மோஹநமிதம்
தமோ யேநாபாஸ்தம் ஸஹி விஜயதே யாமுநமுநி: //

(சங்கரருடைய மாயாவாதமதமும், பாஸ்கரருடைய ஸத்யோபாதி மதமும், யாதவப்ரகாஸருடைய பேதாபேத மதமுமாகிற இம்மூன்று மதங்களின் இருள் எவரால் தமது நூல்களின் மூலம் நிக்கப்பட்டதோ அந்த யாமுநமுநிவராகிய ஆளவந்தார் வெற்றியுடன் விளங்குகிறார்).

எம்பெருமானார் அருளியுள்ள ஸ்ரீவைகுண்ட கத்ய மங்கள ஸ்லோகம்

யாமுநார்ய ஸுதாம் போதி மவகாஹ்ய யதாமதி /
ஆதாய பக்தியோ காக்யம் ரத்நம் ஸந்தர்ஸயாம்யஹம் //

(ஆளவந்தாராகிற அம்ருதக் கடலில் மூழ்கி, அறிந்தளவு நான் பக்தியோக மாகிய ரத்னத்தை எடுத்துக் காண்பிக்கிறேன்)

---